**செய்தி வெளியீடு எண்: 073** **நாள்: 30.01.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து மிகவும் குறைந்த காரணத்தினால், டெல்டா மாவட்ட பாசனத்திற்கு போதுமான அளவு தண்ணீர் கொடுக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, டெல்டா மாவட்ட சம்பா பயிரை காப்பாற்றும் நோக்கில் காவேரி நீரை திறந்துவிட கர்நாடகா அரசை வலியுறுத்துவது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 29.1.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மூத்த அமைச்சர்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் டெல்டா மாவட்ட அமைச்சர்கள் பெங்களூரு சென்று மாண்புமிகு கர்நாடகா முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி சம்பா பயிரை காப்பாற்ற, காவேரி நீரை திறந்துவிட வலியுறுத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக, மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த அமைச்சர்கள் நேரில் சென்று வலியுறுத்த நாள் மற்றும் நேரம் கோரி, கர்நாடக மாநில தலைமைச் செயலாளர் மற்றும் கர்நாடக முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மற்றும் தொலைபேசி மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவேரி தொழில் நுட்பக் குழுமத் தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியன், நீர்வள ஆதாரத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம். பக்தவத்சலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**